
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1080

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

39

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# தலைவர் காட்டிய உறுதி...

## மருத்துவப் படிப்புகளில் 27 % ஓ.பி.சி இட ஒதுக்கீடு!

நாடு சுதந்திரம் அடைந்தபோது, இந்தியாவில் இருந்த மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 28 தான். தமிழ்நாட்டில் 2 மருத்துவக் கல்லூரிகள்தான் இருந்தன. பல மாநிலங்களில் மருத்துவக் கல்லூரிகளே இல்லை. அதற்கு பின்னர், ஒவ்வொரு மாநிலமும் மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் மதுரையில் 1954, தஞ்சையில் 1958, செங்கல்பட்டு, நெல்லையில் 1965, கோவை 1966, திருச்சி 1967 எனப் படிப்படியாக மருத்துவக் கல்லூரிகள் உருவாகத் தொடங்கி, இன்று மாவட்டம் தோறும் மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ளதுபோன்ற, விறுவிறுப்பான மருத்துவக் கட்டமைப்பு, இப்போதும் பல மாநிலங்களில் இல்லை.

1983-ஆம் ஆண்டில், பிரதீப் ஜெயின் எனும் மருத்துவர், லக்னோவில் கிங்ஸ் ஜார்ஜ் மருத்துவக் கல்லூரியின் முதுநிலைப் படிப்பில் இடம் வழங்கக் கோரி நீதிமன்றம் சென்றார். மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளில், அந்த மாநிலங்களுக்குள் இருப்பவர்களுக்கு மட்டுமே சேர்க்கை நடைபெறுகிறது. அதனால், இதர மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது என வாதம் வைத்திருந்தார்.

### அகில இந்திய தொகுப்பு

இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், மருத்துவப் படிப்புகளில் எந்த மாநிலத்தவரும் தான் பிறந்த மாநிலம் அல்லாத வேறு மாநிலத்துக்குச் சென்று படிக்கும் வகையில், அகில இந்திய இடஒதுக்கீடு முறை அறிமுகம் செய்ய வேண்டும் என 1986-ஆம் ஆண்டில் உத்தரவிட்டது. அதையடுத்து, தமிழ்நாடு உள்பட அனைத்து மாநிலங்களும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் உள்பட அனைத்து மருத்துவப் பட்டப் படிப்புகளில் 15 சதவிகித இடங்களும், மருத்துவ மேற்படிப்புகளில் 50 சதவிகித இடங்களும் அகில இந்திய ஒதுக்கீடு என்ற வகையில், மத்திய தொகுப்புக்கு வழங்கின.

இவ்வாறு அகில இந்திய தொகுப்பு என உருவாக்கப்பட்ட மருத்துவச் சேர்க்கையில், 2007-ஆம் ஆண்டுவரை எவ்வித இடஒதுக்கீடும் இல்லாமல் நடைமுறைப்படுத்தப்பட்டது. எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி. என எந்த இடஒதுக்கீடு அளவுகளும் பின்பற்றப்படவில்லை. இதனால், பொது ஒதுக்கீடு என்கிற பெயரில், வசதி வாய்ப்புள்ளவர்கள் மட்டுமே அந்த இடங்களை அனுபவித்து வந்தனர். இந்த நிலையில், அபயநாத் என்பவர் தொடுத்த வழக்கின்படி, பட்டியல் இனத்தவர்களுக்கு 15 சதவிகிதம், பழங்குடியினருக்கு 7.5 சதவிகிதம் என்று அகில இந்திய ஒதுக்கீட்டில், ஒதுக்கீடு அளவை உச்ச நீதிமன்றம் நிர்ணயித்தது. கழகம் அங்கம் வகித்த அப்போதைய ஒன்றிய அரசு, நீதிமன்றத்தில் இதனை ஏற்றுக்கொண்டு, இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்தது.

இந்த நிலையில், ‘ஒன்றிய கல்வி நிறுவனங்கள் சட்டம்’ 2007-ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தபோது, பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இடஒதுக்கீட்டை, மத்திய கல்வி நிறுவனங்களான சஃப்தர் ஜங் மருத்துவமனை, லேடி ஹாரிங்டன், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம், பனாரஸ் பல்கலைக்கழகம் போன்றவற்றில் ஒன்றிய அரசு அமல்படுத்தியது. எனினும் இதே முறை, மாநில அரசுகளால் நடத்தப்படும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் கடைப்பிடிக்கப் படாமல் இருந்தது.

### தேசிய நுழைவுத் தேர்வு

மருத்துவப் படிப்புகளில் சேர 2010-ஆம் ஆண்டில் தேசிய தகுதி நுழைவுத்தேர்வு என்கிற அநீதியான ‘நீட்’ என்ற தேர்வை ஒன்றிய அரசு முன்வைத்தது. நீண்ட இழுபறி, விவாதத்துக்குப் பிறகு 2017-ஆம் ஆண்டு முதல் இந்தத் தேர்வு முறை இந்தியாவில் அமல்படுத்தப்பட்டது. இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே இந்தியாவில் மருத்துவப் படிப்புகளிலும் மருத்துவ மேல் படிப்புகளிலும் சேர முடியும் என்ற நிலை உருவானது.




தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்பட சில மாநில அரசுகள், இந்த நீட் தேர்வு முறைக்கு எதிராக உள்ளன. தேர்வு முறையே கூடாது என்று தமிழ்நாடு அரசு சொல்லி வருகிறது.

கடந்த 2019-ஆம் ஆண்டு, உயர் கல்வி நிறுவனங்கள் கல்விக் கொள்கையில் மாற்றம் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு, அரசியலமைப்பு விதியில் செய்த திருத்தத்தின் விளைவாக, பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு உயர் கல்வியில் 10 சதவிகித இடஒதுக்கீடு கிடைக்கும் வழி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து மருத்துவப் படிப்புகளுக்ககான சேர்க்கையிலும் பிற்படுத்தப்பட்டோர், பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் வலுவடைந்தது. இந்த இடங்களில் 50 சதவீகிதத்தை ஓ.பி.சி. பிரிவினருக்கு இடஒதுக்கீடாக வழங்க, உத்தரவிடக்கோரி கழகம் உள்பட பல கட்சிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன.

இந்த வழக்கு விசாரணையில், எப்போது இடஒதுக்கீடு செய்யப்படும் என மத்திய அரசுக்கு நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. இந்த வழக்கில் பல கட்ட போராட்டங்களுக்குப் பின்னர், 2021-ஆம் ஆண்டில் மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (ஓ.பி.சி.) 27 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படும் என ஒன்றிய அரசு கூறியிருந்தது. இது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்திருந்தது.



“2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தொடங்கிய நம் போராட்டம், 2021-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29-ஆம் தேதி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் வழி உறுதி செய்யப்பட்டது!”

இந்த சட்டப்போராட்டம் தொடர்ச்சியான, நீண்ட சட்ட வாதங்களைக் கொண்டது. கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்களின் வாதத்தினால், இன்று “நாடு முழுவதும் உள்ள அனைத்திந்திய தொகுப்பில் உள்ள மாநில அரசுகளுக்கு உட்பட்ட அனைத்து இளநிலை, முதுநிலை, பட்டய, பல் மருத்துவப் படிப்புகளில் OBC வகுப்பினருக்கு 27 சதவித இட ஒதுக்கீடு தர ஒப்புக்கொண்டு அரசாணை வெளியிட்டது ஒன்றிய அரசு. இதன் மூலம் 2021 முதல் 2025 வரை, நான்கு கல்வியாண்டுகளில் சுமார் 20,088 பிற்படுத்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்டப் போராட்டம் குறித்து, சுருக்கமாகக் கூறும் பி.வில்சன் அவர்கள் “திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில், அவர் காட்டிய உறுதியிலேயே நாடாளுமன்றம் வழி, உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் வழி போராட்டத்தை நடத்தினோம். 2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தொடங்கிய நம் போராட்டம், 2021-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29-ஆம் தேதி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் வழி உறுதி செய்யப்பட்டது” என்று குறிப்பிட்டுள்ளார்.

...தொடரும்

## திராவிட வெறுப்பு எனும் வரலாற்றுத் துரோகம்!

பெரியாருக்கு எதிராக அரசியல் செய்கிறேன் என்கிற பெயரில் சிலர் வெறுப்புப் பிரச்சாரத்தில் இறங்கி வரும் நிலையில், திராவிட வெறுப்பு என்பது வரலாற்றுத் துரோகம் எனப் பதிவிட்டுள்ளார் சமூக செயற்பாட்டாளர் பா.பிரேம். அவரது பதிவிலிருந்து...

“இன்று தமிழ்நாடும், தமிழரும், தமிழ் மொழியும் இந்தியாவின் ஏனைய நிலப்பரப்பு, இனம், மொழி ஆகியவற்றைவிட, சிறப்பெய்தி காணப்படுவதற்கான ஒரே காரணம் திராவிடம்தான். இதை நான் சொல்லவில்லை, பெரியாருக்கு எதிராக நிறுத்த முயலும் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களே அதைத்தான் சொல்கிறார்.

டாக்டர் அம்பேத்கர் எழுத்துகள் தொகுதி 14-ல் தீண்டாமையின் தோற்றுவாயாக இனவேறுபாடு எனும் கட்டுரையில், ‘நாகர்களும் திராவிடர்களும் இந்தியா முழுமைக்கும் பரவி இருந்தார்கள். தமிழ் அல்லது திராவிடம் என்பது இந்தியா முழுமைக்கும் பேசப்படுகிற மொழியாக இருந்தது. ஆரியர்களுடன், ‘நாகர்கள்’ இணக்கமாக ஆரம்பித்து தங்களின் தாய்மொழியான தமிழை கைவிட்டு, சமஸ்கிருதத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், திராவிடர்கள் அவ்வாறு இணங்கவில்லை. இதனாலேயே, ‘தென் இந்திய ‘நாகர்கள்’ தங்களை ‘திராவிடர்கள்’ என்று கூறிக்கொள்வதற்கு முழுத் தகுதி பெற்றிருந்தனர். அது மட்டுமன்றி, ‘வட இந்திய நாகர்கள்’ திராவிட மொழியை முழுவதுமாக கைவிட்ட காரணத்தால், திராவிட மொழி பேசும் ஒரே மக்கள் என்ற முறையில் தங்களை ‘திராவிடர்கள்’ என்று அவர்கள் அழைத்துக்கொள்வது மிக மிக அவசியமாயிற்று. தென் இந்தியர்கள் திராவிடர்கள் என ஏன் அழைக்கப்படலாயினர் என்பதற்கு இதுதான் உண்மையான காரணமாகும்’ என்று எழுதியிருக்கிறார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்தியா முழுமைக்கும் பரவி இருந்த திராவிடர்களை, நாகர்களை ஆரியர்கள் தங்கள் மொழிக்கலப்பினால் மாற்றி, மாற்றி தமிழ்நாடு என்னும் ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் அடைத்துவிட்டார்கள் என்பது தெளிவாகிறது.

இருந்தாலும், தமிழ் இன்றும் தன் இருப்பை உறுதி செய்துகொள்வதற்காக ஆரியத்தோடும், சமஸ்கிருதத்தோடும் போராடிக்கொண்டே இருக்கிறது. அதற்குக் காரணம் திராவிடர் என்கிற உணர்வு மட்டும்தான். திராவிடர் என்கிற உணர்வு செத்துப்போகும்போது தமிழும் செத்துப்போகும்.

அந்தத் திராவிடர் என்கிற உணர்வை இத்தனை ஆண்டுக் காலம் விடாமல் இறுக்கிப் பிடித்திருப்பவர்கள் திராவிட இயக்கத்தவர்கள்தான்” என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



ப.ராஜி



### பிறந்தநாளில் தலைவரிடம் வாழ்த்து!

2013-ஆம் ஆண்டு, என் பிறந்தநாளின் போது, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்று மகிழ்ந்தேன். அப்போது, சேப்பாக்கம் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளராக இருந்தேன். அந்த நாளின் மகிழ்ச்சி என்றென்றைக்கும் நீடிக்கும்.

**- ப.ராஜி, துணை அமைப்பாளர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி, சேப்பாக்கம் பகுதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கொள்கை குலுங்கும் கோலாகலக் காட்சி!

1958-ஆம் ஆண்டு, மே 10 மற்றும் 11 தேதிகளில் தஞ்சை மாவட்டக் கழக 3-வது மாநாடு திருவாரூரில் நடைபெற்றது, மாநாட்டுப் பொருளாளராக கலைஞர் பொறுப்பேற்றிருந்தார். மாநாட்டிற்காகத் திரட்டிய நிதியில் அனைத்து செலவுகளும் போக, ரூ.20 ஆயிரம் மிச்சப்பட்டதை, பேரறிஞர் அண்ணாவிடம் மாநாட்டுப் பந்தலிலேயே வழங்கினார். அதற்காக, மேடையிலேயே பாராட்டிய அண்ணா, “திருவாரூரில் கொள்கை குலுங்கும் கோலாகலக் காட்சியைப் பாரீர்!” என்று பெருமையோடு எழுதினார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.